### தமிழ்நாடு – ஒன்றிய அரசுக்கு ஒருபோதும் அடிபணியாது!

# நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

## உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!



**சென்னை,ஜூலை 12-**

**உலக மக்கள் தொகை நாளையொட்டி விடுத்த சமூக வலைதளப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாடு உங்களுக்கு (ஒன்றிய அரசுக்கு) அடிபணியாது! நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான அணி!" என்று சூளுரைத்துள்ளார்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலக மக்கள்தொகை நாளில், ஒன்றிய அரசுக்கு ஒரு நினைவூட்டல் :

- **தமிழ்நாடு மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் முன்னணி வகிக்கிறது,**
- **பெண்களின் மாண்பைக் காத்து அவர்களுக்கான அதிகாரத்தை வழங்குகிறது.**
- **அனைவருக்கும் மருத்துவம் மற்றும் கல்வியை உறுதிசெய்கிறது.**
- **நீடித்து நிலைக்கத்தக்க வளர்ச்சியை முன்னெடுக்கிறது.**

ஆனால், பதிலுக்கு நமக்குக் கிடைப்பது என்ன?

குறைவான மக்களவைத் தொகுதிகள். குறைவான நிதி ஒதுக்கீடு. நாடாளுமன்றத்தில் இருந்து ஒதுக்கப்படும் நமது குரல்.

ஏன்? ஏனென்றால், தமிழ்நாடு சரியானதைச் செய்தது. அதுதான் டெல்லியை அச்சுறுத்துகிறது.

இதைவிட மோசம் என்ன என்றால், பழனிசாமி அவர்களும் அவரது கட்சியும் தமிழ்நாட்டின் பக்கம் நிற்காமல், டெல்லிக்குத் துணைபோகிறார்கள். நாம் எட்டிய வளர்ச்சிக்காக நம்மைத் தண்டிக்கும் அநியாயமான தொகுதி மறுவரையறையை ஆதரிக்கிறார்கள்.

தெளிவாகச் சொல்கிறேன்: தமிழ்நாடு உங்களுக்கு அடிபணியாது. நாங்கள் ஒருமித்து எழுவோம்! இது டெல்லி அணிக்கு எதிரான ஓரணி!

நமது மண், மொழி, மானம் காக்க இணைவீர் ஓரணியில் தமிழ்நாடு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



திருவெறும்பூர் தொகுதியில் காட்டூர் பாப்பாகுறிச்சி ரோட்டில் ரூபாய் 1.75 கோடியில் அமையவுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சூரியூர் பகுதியில் ரூபாய் 3 கோடியில் அமையவுள்ள ஜல்லிக்கட்டு மைதானம், ரூபாய் 48 கோடியில் அமைய உள்ள ஒலிம்பிக் அகாடமி ஆகிய கட்டிடப் பணிகளை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டு கட்டுமானப் பணிகளை விரைவுப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார் அதனைத் தொடர்ந்து 150 ஏக்கர் பரப்பளவில் அமைய உள்ள சிப்காட் இடத்தையும் பார்வையிட்டார். இந்நிகழ்வில் கட்டிட பொறியாளர் மற்றும் வல்லுனர்கள், ஒன்றிய கழக செயலாளர் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் கயல்விழி, உதயகுமார், மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# அலுவலர்களின் பயன்பாட்டிற்கு ரூ.17.65 கோடி மதிப்பில் 198 வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 12

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட செயல்படுத்தி, தமிழ்நாடு அரசு நாட்டிலேயே முன்னோடியாக விளங்கி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும், உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும், களஆய்வு மேற்கொள்ளவும் பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும், துறை அலுவலர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 202526 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப் பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகனங்களை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 109 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1018 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரிப்பன் கட்டட வளாகத்தில்

# உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு வாகனம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,ஜூலை.12-

உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று (11.07.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தின உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் குடும்ப நல கட்டுப்பாட்டு முறைகள் குறித்த விழிப்புணர்வினை பொது மக்களுக்கு ஏற்படுத்தும் வகையிலான விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்ந. இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் ரமோனா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மணலி புதுநகர் 16வது வட்டம் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது. திராவிடர் கழக துணை பொது செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி மற்றும் தலைமை கழக சொற்பொழிவாளர் போடி காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் இரண்டு பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், ஆயிரம் மகளிருக்கு சேலைகள் ஆகியவை பகுதி கழகம் சார்பில் வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் வரவேற்றார். அறிவழகி பாலகிருஷ்ணன், கே. அங்குசாமி, கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், பி.எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், வி. திராவிட வீரன், பி. நிர்மல் குமார், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பா. சந்திரன், பி. தரணி, கே. செல்வன், நந்தினி சண்முகம், எஸ்.கருணாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### அரியலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 13.07.2025 | ஜெயங்கொண்டம் மத்திய ஒன்றியம் | தண்டலை | கவிஞர் இளஞ்செழியன்<br>சை.சேக் அலிமாஸ் அலி |
| 2 | | திருமானூர் மத்திய ஒன்றியம் | சேனாபதி | பழ.புனிதம்<br>ரா.சிந்துநதி |
| 3 | | அரியலூர் தெற்கு ஒன்றியம் | அருங்கால் ஊராட்சி | எசனை சி.ஆறுமுகம்<br>ப.வெங்கடேஷ் |
| 4 | | தா.பழூர் மத்திய ஒன்றியம் | சுத்தமல்லி ஊராட்சி | மு.விஜயரத்தினம்<br>ஐ.பாலகணபதி |
| 5 | | ஆண்டிமடம் கிழக்கு ஒன்றியம் | பெரிய கிருஷ்ணாபுரம் (ரெட்டிதத்தூர்) | நாமக்கல் ராஜகோபால்<br>சி.மில்லர் மண்டேலா |
| 6 | | செந்துறை வடக்கு ஒன்றியம் | ஆர்.எஸ்.மாத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>ரா.கனிமொழி |
| 7 | 14.07.2025 | தா.பழூர் கிழக்கு ஒன்றியம் | நாயகனைபிரியாள் | எசனை சி.ஆறுமுகம்<br>அ.அருண்குமார் |
| 8 | | ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம் | குளத்தூர் | கவிஞர் வீரமுரசு<br>காருண்யா நடராஜன் |
| 9 | | ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம் | ஜெயங்கொண்டம் குறுக்கு சாலை | மு.விஜயரத்தினம்<br>மு.ராமமூர்த்தி |
| 10 | | திருமானூர் மேற்கு ஒன்றியம் | சன்னாவூர் | பழ.புனிதம்<br>துரை தினகரன் |
| 11 | | அரியலூர் வடக்கு ஒன்றியம் | பொட்டவெளி ஊராட்சி, வெள்ளூர் கிராமம். | கவிஞர் இளஞ்செழியன்<br>வா.ராஜேஸ்வரி |
| 12 | | செந்துறை மேற்கு ஒன்றியம் | சன்னாசிநல்லூர் | பவித்ரம் கண்ணன்<br>அ.விஜயலெட்சுமி |
| 13 | 15.07.2025 | தா.பழூர் மேற்கு ஒன்றியம் | திருபுரந்தான் | கவிஞர் வீரமுரசு<br>அ.சுஹாசினி |
| 14 | | ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம் | அழகாபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>ம.சையது முஷரப் |
| 15 | | ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம் | இளமங்கலம் (கச்சிபெருமாள்) | பழ.புனிதம்<br>ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 16 | 16.07.2025 | திருமானூர் கிழக்கு ஒன்றியம் | கோமான் | கவிஞர் வீரமுரசு<br>அ.தீன்ஷா நூஃப் |
| 17 | | செந்துறை தெற்கு ஒன்றியம் | சிறுகடம்பூர் | கவிஞர் இளஞ்செழியன்<br>அ.செல்வக்குமார் |
| 18 | | அரியலூர் நகரம் | வார்டு–13, தேரடி வீதி. | பழ.புனிதம்<br>சி.ஷாலினி |
| 19 | | உடையார்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம் | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.தீன்ஷா நூஃப் |
| 20 | 17.07.2025 | ஜெயங்கொண்டம் நகரம் | தேவாங்கர் நடுத்தெரு | கவிஞர் வீரமுரசு<br>ஜெ.ராஜேஸ்வரி |
| 21 | | வரதராஜன்பேட்டை பேரூர் | ஆரோக்கியபுரம் | கவிஞர் இளஞ்செழியன்<br>காருண்யா நடராஜன் |
| 22 | | அரியலூர் மத்திய ஒன்றியம் | வி.கைக்காட்டி | கவிஞர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன்<br>அ.அருண்குமார் |

அரியலூர்

நாள் : 10.07.2025

கலைஞர் 100 1924 - 2023

